IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 92/2014

Deposition of Witness : XW 1

Name : ராஜேந்திரன் (வயது – 46)

Father's Name /W/o : த/பெ அர்ஜுன முதலியார்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : பருத்திபுத்தூர்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 18.11.2025.

**(பிரதிவாதி ஆஜர் இல்லை. பிரதிவாதி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)**

## முதல் விசாரணை

1. வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கோவிந்தன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி தீனதயாளன் என்பவர் அரக்கோணத்தை சேர்ந்தவரா என்றால் ஆம். 1,2 பிரதிவாதிகள் எங்கு வசித்து வருகிறார்கள் என்றால் அவிநாசி கண்டிகை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ – 40 FULL AND FINAL SETTLEMENT RECEIPT மற்றும் கடிதத்தில் உள்ள சாட்சி கையொப்பம் யாருடையது என்றால் என்னுடையது. அதில் உள்ள சாட்சி கையொப்பம் EX.X1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. வா.சாஆ – 40 படி 1,2 பிரதிவாதிகள் தீனதயாளன் பெயருக்கு பொது அதிகாரம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். 31.05.2007 தேதியில் முழு பணத்தையும் செட்டில்மெண்ட் செய்தார் என்றால் சரிதான். 31.05.2007 ஆம் தேதிக்கு முன்பே பல முறை பகுதியாக சொத்தை விற்றுவிட்டார். முழு

பணத்தையும் 31.05.2007 தேதியில் செட்டில்மெண்ட் செய்தார்.

3. 31.05.2007 தேதியில் 1,2 பிரதிவாதிகள் வா.சா.ஆ – 40 பத்திரத்தை கையொப்பமிட்டார்களா என்றால் ஆம். கோவிந்தராஜ் கையொப்பம் ஏன் வா.சா.ஆ – 40 இல் வாங்கப்பட்டது என்றால் 2 ஆம் பிரதிவாதியின் அண்ணன் என்பதால் கையொப்பமிட்டார். வா.சா.ஆ – 40 இல் குறிப்பிட்டுள்ள ரூ.5,31,000/– பணம் எவ்வாறு செலுத்தினார் என்றால் ரொக்கமாக செலுத்தினார்கள். நான் மேற்படி பணம் செலுத்துவதை என் கண்ணால் பார்த்தேனா என்றால் ஆம்.

4. 4 ஏக்கர் 21 செண்ட் மொத்ததையும் வாதி விற்று விட்டார் என்றால் சரிதான். எந்த ஊர் சொத்து என்றால் ஆத்தூர் கிராமம். மேற்படி சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 340/2. வா.சா.ஆ – 40 கடிதத்தில் உள்ள தேதி என்னவென்றால் 31.05.2007.